சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) – 2011–12 ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டு திட்டத்திற்கான மாநில செயல் திட்டம் – செயல்படுத்துவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை

அரசாணை (நிலை) எண். 114

நாள்: 15.11.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 29

படிக்கப்பட்டவை

1. அரசாணை நிலை எண்.94, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை, நாள் 6.8.2010.
2. அரசாணை நிலை எண்.97, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை, நாள் 28.10.2011.
3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கடித எண் ஜி1/2278/2011, நாள் 20.9.2011.

----

ஆணை

பார்வை 1ல் கண்ட அரசாணையில், 2010–2011–ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கான மாநில செயல் திட்டம் செயல்படுத்துவது சம்பந்தமாக அரசாணை வெளியிடப்பட்டது.

2) பார்வை 2ல் கண்ட அரசாணையில் 2011–2012–ம் ஆண்டு சிறப்பு மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் தாட்கோ திட்டங்கள் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் செயல்படுத்துவது சம்பந்தமாக அரசாணை வெளியிடப்பட்டது.

3) பார்வை மூன்றில் காணும் தாட்கோ மேலாண்மை இயக்குநர், தனது கடிதத்தில் 2011–2012–ம் ஆண்டிற்கான மத்திய சிறப்பு நிதி உதவியுடன் கூடிய தாட்கோ மாநில செயல் திட்டத்தினை செயல்படுத்த ஆணை வழங்கக்கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4) ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்காக, 2011–12–ம் ஆண்டிற்கான, மாநில செயல்திட்டத்திற்கான கருத்துருவில் கீழ்காணும் திட்டங்களை மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருந்தார்.

| வ. எண் | திட்டம் |
|---|---|
| I. | **தனிநபர் கடன் திட்டம்** |
| 1 | நிலம் வாங்குதல் மற்றும் நிலம் மேம்பாட்டுத் திட்டம் |
| 2 | தொழில் முனைவோருக்கான வளர்ச்சி திட்டம் |
| 3 | மின்சலவை இயந்திரம் |
| 4 | பயனீயர் வாகனம் |
| 5 | சுமை வாகனம் |
| 6 | காலனி தயாரித்தல் |
| 7 | இதர பொருளாதார செயல்பாடுகள் |
| 8 | என்.எஸ்.எப்.டி.சி. வாகனம் |
| | இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் |
| 9 | சித்த மருத்துவர் |
| 10 | பல் மருத்துவர் |
| 11 | வாகனம் மற்றும் இதர |
| II. | **சுய உதவிக் குழுக்களுக்கான நிதியுதவி** |
| 12 | சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி (4000 சுய உதவி குழு) |
| 13 | சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன் திட்டம் |
| III | **தனிநபருக்கு வழங்கப்படும் நிதியுதவி** |
| 14 | மின் இணைப்பு விரைந்து பெறும் திட்டம் |
| 15 | நலநிதி |
| 16 | இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றவருக்கு வழங்கப்படும் நிதியுதவி |
| 17 | சட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் தொடங்க வழங்கப்படும் நிதியுதவி |

5) தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகள் மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஆதிதிராவிடர்களின் மக்கள் தொகை மற்றும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள உள்ளூர் வளங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின் 2011–12 –ம் ஆண்டிற்கான மாநில செயல்திட்டத்திற்கான கருத்துரு, ரூ.208.67 கோடி (ரூபாய் 75.95 கோடி மானியம் + ரூ.132.72 கோடி பருவக் கடன்) அளவில் 90,580 நபர்கள் பயனடையும் வகையில் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்கு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் அனுப்பியுள்ளார்.

6) 2011–12–ம் ஆண்டில், 90,580 ஆதிதிராவிட நபர்கள் பயனடையும் வகையில் ரூ.208.67 கோடியில் (ரூபாய் 75.95 கோடி மானியம் + ரூ.132.72 கோடி பருவக் கடன்) செயல்படுத்தப்படவுள்ள ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை கொண்ட மாநில செயல் திட்டத்திற்கான கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2011–12–ம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவி ரூ.75.95 கோடி நிதியுதவியுடன் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தாட்கோவின் மூலம் செயல்படுத்த கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஏற்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

(i) பயனாளிகளை தேர்வு செய்யும் போதும், திட்டங்களை செயல்படுத்தும் போதும் திட்டத்தின் பயன் அதிகபட்ச பயனாளிகளை சென்றடையும் வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என மேலாண்மை இயக்குநர் தாட்கோவை கேட்டுக்கொள்ளலாம்.

(ii) வங்கிகள் திட்டத்திற்கான கடனை வழங்கும்போது, தாட்கோவும் திட்டத்திற்கான மானியத்தை பின்விடுப்பு (Backend Subsidy) வழங்க வேண்டும், மேற்காணும் பயன்களும் நிதியுதவியும் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமானதாகும்.

(iii) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் அல்லது வேறு ஏதேனும் திட்டங்கள் மூலம் பயன் பெறும் ஆதிதிராவிடர்கள் தாட்கோ மாநில செயல் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் மூலம் பயனடைதல் கூடாது.

7) மேலும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் பயனாளிகளை தேர்வு செய்யும் போதும், திட்டங்களை செயல்படுத்தும் போதும், திட்டத்தின் பயன் அதிகபட்ச பயனாளிகளை சென்றடையும் வண்ணம் பார்த்து கொள்ள வேண்டும். மற்றும் வங்கிகள் திட்டத்திற்கான கடனை வழங்கும்போது, தாட்கோ திட்டத்திற்கான மானியத்தை வழங்க வேண்டும்.

## தாட்கோ மாநில செயல்திட்டம் –2011–2012

| வ. எண் | திட்டம் | இலக்கு தனி நபர் | இலக்கு குழுக் கள் | அலகுத் தொகை (ரூபாய் இலட்சத் தில்) | மானியம் ஒரு நபருக்கு | பருவக் கடன் ஒரு நபருக்கு | மொத்த மானியம் | மொத்த பருவக் கடன் | மொத்தம் (7+8) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | 2 | 3 | | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| I. | **தனிநபர் கடன் திட்டம்** | | | | | | | | |
| அ. | நிலம் வாங்குதல் மற்றும் நிலம் மேம்பாட்டுத் திட்டம் | 100 | | 7.50 | 2.25 | 5.25 | 2.00 | 4.67 | 6.67 |
| ஆ. | தொழில் முனைவோருக்கான வளர்ச்சி திட்டம் | | | | | | | | |
| இ. | மின்சலவை இயந்திரம் | 100 | | 4.00 | 1.20 | 2.80 | 1.20 | 2.80 | 4.00 |
| ஈ. | பயனீயர் வாகனம் | 500 | | 1.60 | 0.48 | 1.12 | 2.40 | 5.60 | 8.00 |
| உ. | சுமை வாகனம் | 300 | | 3.60 | 1.08 | 2.52 | 3.24 | 7.56 | 10.80 |
| ஊ. | காலனி தயாரித்தல் | 600 | | 0.50 | 0.15 | 0.35 | 0.90 | 2.10 | 3.00 |
| எ. | இதர பொருளாதார செயல்பாடுகள் | 980 | | 5.00 | 1.50 | 3.50 | 14.75 | 34.25 | 49.00 |
| ஏ. | என்.எஸ்.எப்.டி.சி. வாகனம் | 200 | | 5.20 | 1.56 | 3.64 | 1.56 | 3.64 | 5.20 |
| | **மொத்தம்** | **2780** | | | | | **26.05** | **60.62** | **86.67** |
| | இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் | | | | | | | | |
| அ | சித்த மருத்துவர் | 50 | | 1.00 | 0.30 | 0.70 | 0.15 | 0.35 | 0.50 |
| ஆ. | பல் மருத்துவர் | 100 | | 5.00 | 1.50 | 3.50 | 1.50 | 3.50 | 5.00 |
| இ. | வாகனம் மற்றும் இதர | 450 | | 5.00 | 1.50 | 3.50 | 6.75 | 15.75 | 22.50 |
| | **மொத்தம்** | **600** | | **11.00** | **3.30** | **7.70** | **8.40** | **19.60** | **28.00** |
| II | **சுய உதவிக் குழுக்களுக்கான நிதியுதவி** | | | | | | | | |
| அ | சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி (4000 சுய உதவி குழு) | 60000 | 4000 | 0.60 | 0.10 | 0.50 | 4.00 | 20.00 | 24.00 |
| ஆ | சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன் திட்டம் | 19500 | 1300 | 5.00 | 2.50 | 2.50 | 32.50 | 32.50 | 65.00 |
| | **மொத்தம்** | **79500** | | **5.60** | **2.60** | **3.00** | **36.50** | **52.50** | **89.00** |
| III. | **தனிநபருக்கு வழங்கப்படும் நிதியுதவி** | | | | | | | | |
| அ | மின் இணைப்பு விரைந்து பெறும் திட்டம் | 1000 | | 0.10 | 0.10 | | 1.00 | - | 1.00 |
| ஆ | நலநிதி | 6000 | | 0.05 | 0.05 | | 3.00 | - | 3.00 |
| இ | இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றவருக்கு வழங்கப்படும் நிதியுதவி | 200 | | 0.25 | 0.25 | | 0.50 | - | 0.50 |
| ஈ | சட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் தொடங்க வழங்கப்படும் நிதியுதவி | 500 | | 0.10 | 0.10 | | 0.50 | - | 0.50 |
| | **மொத்தம்** | **7700** | **5300** | | | | **5.00** | | **5.00** |
| | **மொத்தம்** | **90580** | | | | | **75.95** | **132.72** | **208.67** |

8) இத்திட்டத்தை செயல்படுத்தும்போது, தேவைக்கேற்ப ஒதுக்கீடுகளையும் பயனாளிகள் எண்ணிக்கையையும் மாற்றி அமைத்துக்கொள்ள மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9) மேற்காணும் திட்டங்களின் பயன்களும் நிதியுதவியும், ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமானதாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அல்லது வேறு ஏதேனும் திட்டங்கள் மூலம் பயன் பெறும் ஆதிதிராவிடர்கள் தாட்கோ மாநில செயல் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயனடைய தகுதியற்றவர் என்பதனை உறுதி செய்து கொள்ளுமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை – 8.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1) சென்னை – 35.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை 6.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை 6.
இயக்குநர், சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை, புதுடெல்லி –1.
நகல் இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சென்னை – 6.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச்செயலர், சென்னை – 9.
அனைத்து தாட்கோ, மாவட்ட மேலாளர்கள் (மேலாண்மை இயக்குநர், தாட்கோ வழியாக)
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (அனைத்து பிரிவுகள்) , சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.